


சிவகங்கையில் நடைபெற்ற மாவட்டக் கழக செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர், கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார்.மேடையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ , மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் மற்றும் நிர்வாகிகள் உள்ளார்கள்.



உழவரைத் தேடி வேளாண்மை உழவர் நலத்துறை திட்டம். நமது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 29.05.2025 அன்று காணொலி வாயிலாக துவங்கி வைக்கப்பட்ட உழவரைத் தேடி வேளாண்மை உழவர் நலத்துறை திட்டம் எனும் நவீன திட்டம், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 12 வட்டாரங்களில் நேற்று முதல் செயல்படுத்தப்பட்டது. இந்த விழாவின் ஒரு பகுதியாக, ஜெக வீரபாண்டிபுரம் ஊராட்சி சுப்பிரமணியபுரம் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வில் சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் கலந்து கொண்டார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஜுன் 3 முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளை

# சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாட வேண்டும்!

## செயற்குழு கூட்டத்தில் அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜுன். 1-

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் சிவகங்கையில் உள்ள தனியார் மகாலில் மாவட்ட அமைத்தலைவர் வழக்கறிஞர்அ. கணேசன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக துணைச் செயலாளர் த. சேங்கைமாறன் வரவேற்று ப்பேசினார்.

இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது:-

கழக தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா வருகிற ஜுன் 1 கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த பொழுது செய்த சாதனைகள் அவரின் பேச்சுக்கள் அவரைப் பற்றிய பாடல்கள் அடங்கிய ஒலி நாடாக்களை நகரம் ஒன்றியம் பேரூர் கழகம் மற்றும் கிளைக் கழகங்களில் ஒலிபரப்ப வேண்டும். கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்க வேண்டும். முதியோர் இல்லங்கள் ஆதரவற்றோர் இல்லங்களில் உணவுகள் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

திராவிட மாடல் தலைவர் முதல்வர் கழக அரசின் நான்கரை ஆண்டு சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும். ஏழை எளிய நடுத்தர அனைத்து மக்களுக்கும் கழக அரசு தலைவர் கலைஞர் வழியில் பேரறிஞர் அண்ணா வழியில் பல்வேறு உதவிகளை செய்து வருகிறது . அந்த உதவிகளை கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் தொடர்ந்து செய்து வருகிறார்.இதை நாம் மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும்.

நடைபெற உள்ள சட்டமன்ற 2026 சட்டமன்ற தேர்தலில் சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதியில் நாம் வெற்றி பெற வேண்டும். நாம் நமது தேர்தல் பணியினை பாராளுமன்ற தேர்தலில் துவங்கி விட்டோம். அதற்கான வியூகத்தினை கழகத் தலைவர் தளபதி அவர்கள் வகுத்துக் கொடுத்துவிட்டார்கள் .இதற்கான சட்டமன்ற



தொகுதி பார்வையாளர்கள்நியமிக்கப்பட்டார்கள். தற்பொழுது மண்டல பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் பங்கேற்ற கூட்டமும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் கழகத் தலைமை அறிவித்த நான்கு சட்டமன்ற தொகுதிகளில் 29 கூட்டங்களை நாம் சிறப்பான முறையில் நல்ல முறையில் நடத்தி உள்ளோம். இதுபோல் தொடர்ந்து நாம் நமது அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்து கூறி வாக்குகளை கேட்க வேண்டும். அதற்கான பணிகளை இப்பொழுதே து வங்கிட வேண்டும்.

நாளை ஜுன் ஒன்றாம் தேதி மதுரையில் பொதுக் குழு கூட உள்ளது .இந்த பொதுக்குழுவில் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் பங்கேற்று நமக்கு தேர்தல் பற்றிய ஆலோசனைகளை வழங்க உள்ளார்கள்.

எனவே மாவட்டத்தில் உள்ள பொதுக்குழு உறுப்பினர்கள் நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும். கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் ஓய்வறியாத வகையில் மக்களுக்கு பணியாற்றி வருகிறார்.அவரது உழைப்பை யாராலும் செய்ய முடியாது. மக்களுக்கான உழைப்பு பணியாற்றி வருகிறார் . அயராது சோர்வின்றி உழைத்து வருகிறார் .அவரது எண்ணங்கள் நிறைவேற நாம் செயல்பட வேண்டும். கழகத் தலைவர் கூறும் அத்தனை செயல்பாடுகளுக்கும் நாம் ஆதரவு தர வேண்டும்.

சமீபத்தில் நடைபெற்ற மத்திய அரசின் நிதிஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதாக அறிவித்துவிட்டு கூட்டத்தில் பங்கேற்றார்.

முன்னதாகவே கழக தலைவர் முதல்வர் அவர்கள் அறிவித்துவிட்டு சென்றார் .அங்கு நமது மாநிலத்தின் உரிமைகளை பிரதமர் மோடியிடம் பேசி விட்டு வந்தார் .ஆனால் சம்பந்தியை காப்பாற்ற சட்டமன்ற கூட்டம் நடக்கும் போது நிர்வாகிகளுக்கு கூட தெரியாமல் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி டெல்லி சென்றார். டெல்லிக்கு எதற்காக சென்றார் என்பது இன்று வரை மர்மமாக உள்ளது . எனவே அவர் பேசுவதெல்லாம் மக்களிடம் எடுபடாது. ஜனநாயகத்தை சீரழிக்கும் வகையில் பிரதமர் மோடி அவர்கள் செயல்பட்டு வருகிறார். மாநிலங்களுக்கு தரவேண்டிய பல்வேறு நிதிகளை தருவதில் பாரபட்சம் தொகுதி சீரமைப்பு போன்ற பிரச்சனைகளை கிளப்பி வருகிறார்கள் . இதையெல்லாம் முதல் வர் அவர்கள் எதிர்த்து போராடி வெற்றி பெற்று வருகிறார். தற்பொழுது ரிசர்வ் வங்கி நகைக்கடனில்பல்வேறு நிபந்தனைகளை விதித்தார்கள். இந்தியாவிலேயே தமிழக முதல்வர்அவர்கள் எதிர்ப்பு தெரிவித்த தால் தற்பொழுது திரும்பப் பெறப்பட்டுள்ளது. பா.ஜ.க. எப்பொழுதெல்லாம் மாநிலங்களுக்கு அநீதியாக செயல்படுகிறதோ அதை எதிர்த்து குரல் கொடுப்பவர் நமது முதல்வர் ஆவார்.

இதில் வெற்றி பெறும் முதல்வரும் நமது முதல்வர் அவர்கள்தான். எனவே கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைய வேண்டும். கழகத் தலைவர் தளபதி அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வராக பதவி ஏற்க வேண்டும் . அதற்கு நாம் அயராது கடமை உணர்வுடன் பணியாற்ற வேண்டும் .

இவ்வாறு அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் பேசினார் .

இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப .மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி, மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தமிழ் பிரியா, செயற்குழு உறுப்பினர் தா .ராமையா, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்துார் கே. எஸ். ரவி, பி.டிஆர். முத்து, அம்பலமுத்து ,தெய்வானை இளமாறன்,கார். ஜெயமூர்த்தி,த.உதயகுமார்,

நகர் கழகசெயலாளர்கள் சி..எம் .துரை.ஆனந்த் க.பொன்னுச்சாமி நா .குணசேகரன் ,பெரி. பாலா, பூஒன்றிய கழகச் செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், எம். ஜெயராமன், பெ.மந்தக்காளை, துரை.ராஜாமணி, மா .அண்ணாதுரை, ஆ.முத்துச்சாமி,எம் .ஏ கடம்ப சாமி, சுப்பிர மணியன் ,திருமதி வசந்தி சேங்கைமாறன் ,பூமணி ,கே.. பாலசுப்பிரமணியன்,எஸ் .சண்முக வடிவேல்,விராமதி மாணிக்கம், நா. நெடுஞ்செழியன் ,குன்றக்குடி சுப்பிரமணியன், கே .எஸ் .ஆனந்த், சுப. சின்னதுரை, நாகனி ரவி ,பூபால சிங்கம் ,லெ.மு.ரவிச்சந்திரன், ஆர். எம். கென்னடி, யோக .கிருஷ்ணகுமார், வே.ஆரோக்கியசாமி,ஆறு. செல்வராஜன், வே.தமிழ் மாறன் ,கா.வெங்கட்ராமன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பா திருமதி பவானி கணேசன்,

மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் , மாவட்ட சுற்றுச் சூழல்அணி அமைப்பாளர் எஸ்எஸ்ஏ .வல்லபாய், விவசாய தொழிலாளர் அமைப்பாளர் தனசேகரன், மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், மும்பை பொறுப்புக்குழு தலைவர் ஜேசுராஜா,

ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துகுமார் சிவபுரி சேகர் , சேவியர் ,பேரூர் கழகச் செயலாளர்கள் ஆர். .கார்த்திகேயன், பி எ. நஜ்முதீன், நாகூர் கனி, ஜெயராமன், தீ.கதிர்வேல், பிரம்மையா, கே.பி. எஸ். பழனியப்பன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன் பிள்ளை யார்பட்டி சதீஸ், மகளீரணி திலகவதி கண்ணன் மற்றும் ஒன்றிய, நகர, பேரு ர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். சிவகங்கை நகர்கழக செயலாளர் சி.எம். துரை.ஆனந்த் நன்றி கூறினார்.



நாகர்கோவில் மாநகராட்சி, 28 வது வார்டுக்குட்பட்ட 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான அகாடமி விருது – 2025 வழங்கும் விழா 28 வது வார்டு தி.மு.க. மாமன்ற உறுப்பினர் ஜெ.நா.அனந்த லெட்சுமி தலைமையில், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் எ.மாணிக்க ராஜா முன்னிலையில் நாகர்கோவில், கம்பளம் சாலை, சேனைத் தலைவர் மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு சிறப்பரையாற்றி ஆசிரியர்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்தார். நிகழ்ச்சியில் மருத்துவர் எஸ்.வி.ஆனந்த், மு.சேக்மீரான், முத்துகிருஷ்ணன், ஷாகுல், முருகன், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் உட்பட ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஓட்டன்சத்திரம் தொகுதியில்

# காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் விரைவில் பயன்பாட்டிற்கு வரும்!

## அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

ஒட்டன்சத்திரம்,ஜுன் 1-

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் ரூ. 21.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட காந்தி மார்க்கெட் வணிகவளாக கடைகள் மற்றும் ரூ.18.64 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட குழந்தை வேலப்பர் கோயில் மலை கிரிவல பாதை ஆகிய வற்றை நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இதை தொடர்ந்து ஒட்டன்சத்திரத்தில் நடந்த விழாவில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில், திண்டுக்கல் எம்.பி. சச்சிதானந்தம் முன்னிலையில் ஒட்டன்சத்திரம் காந்தி மார்க்கெட் வணிக வளாக கடைகள் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

பின்னர் அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல் வேறு திட்டங்களை அறிவித்து கிராமப்புறத்தில் வாழும் கடைக்கோடி மக்களுக்கும்



சென்றடை கின்ற வகையில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். ஒட்டன் சத்திரம் நகராட் சிக்கு கேட்டவுடன் அதிக விதியை ஒதுக்கி வருகிறார். படித்து முடித்த மாணவ, மாணவிகள் போட்டி தேர்வில் வெற்றி பெற காளாஞ்சிபட்டியில் கலைஞர் ஒருங்கிணைந்த போட்டி தேர்வு பயிற்சி மையம் குளிரசாதன வசதி யுடன் அமைக்கப்பட்டுளளது இம்மையத்தில் பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகள் பல்வேறு போட்டி தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். எனவே இப்பயிற்சி மையத்தினை மாணவ, மாணவிகள் பயன்படுத்தி கெள்ள வேண்டும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில் காவிரி கூட்டுக்குடிநீர் திட்ட பணிகள் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இந்த பணிகள் முடியும் தருவாயில் உள்ள நிலையில் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. ஒட்டன் சத்திரம் நகராட்சியை தூய்மையான நகராட்சியாக மாற்றும் வகையில் ரூ 9 கோடி மதிப்பீட்டில் குப்பை கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் குப்பைகளை சேகரிக்க வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பச்சஆறு. குளம் போன்ற நீர்நிலைகளில் கழிவுநீர் கலப்பதை தவிர்க்கும் வகை யில் கழிவுநீர் சுத்திகரிக்கும் திட்டம்ரூ.5.52 கோடிமதிப் பீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் சாலை சீரமைப்பு பணிகள் மேற் கொள்ளப்படவுள்ளன. கழிவுநீர் கால்வாய்கள் ஏற் கனவே ரூ.18 கோடி மதிப் பீட்டில் சீரமைக்கப்பட் டுள்ள நிலையில் மேலும் ரூ.23 கோடியில் சீரமைக்க அனுமதி வழங்கப்பட்டுள் ளது.

ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு வரு கிறது. இந்த பணிகள் விரை வில் முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். ஒட் டன்சத்திரமநகராட்சிபகு தியில் 440 மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. காய்கறி மார்க்கெட்டில் கடைகள் பெற்றுள்ளவியா பாரிகள் நல்ல முறையில் வியாபாரத்தில் வளர்ந்து மென்மேலும் வளர்ச்சிய டைய வேண்டும் இவ்வாறுபேசினார். இந்நிகழ்ச்சியில் நகராட்சிகளின் மண்டல இயக்குநர் முஜிபூர் ரகுமான், பழநி வருவாய் கோட்டாட்சியர் கண்ணன், நகராட்சி தலைவர் திருமலைச்சாமி, துணை தலைவர் வெள்ளைச்சாமி, ஆணையாளர் ஸ்வேதா, நகராட்சி பொறியாளர் சுப்பிரமணிய பிரபு, சுகாதார ஆய்வாளர் ராஜமோகன், கணக்கர் சரவணன், வருவாய் ஆய்வாளர் விஜய் பால்ராஜ். மேலாளர் ரவி , வட்டார வளர்ச்சி அலுவலர் காமராஜ், மாவட்ட அவை தலைவர் மோகன், ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன, பாலு, செயற்குழு உறுப்பினர் கண்ணன். ஒன்றிய துணை செயலா ளர்கள் முருகானந்தம். சிவபாக்கியம் ராமசாமி, ராமகிருஷ்ணன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாண்டியராஜன் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், காய்கறி மார்க்கெட் சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# மும்பை புறநகர் மாநில தி.மு.க. சார்பில் முதியோர் - ஆதரவற்றோர்க்கு உணவு!

## பொறுப்பாளர் அலிசேக் மீரான் - அ.இளங்கோ பங்கேற்பு!

மும்பை, ஜுன்.1-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேனாள் தலைவரும் தமிழினக் காவலருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது நூற்றியிரண்டாம் ஆண்டு பிறந்த நாள் விழா வருகிற 03-06-2025 செவ்வாய்க் கிழமை அன்று அந்தேரி - விஜய் நகர் மரோல் மரோசி சாலையில் உள்ள "சிஸ்ட்டர்ஸ் அடோரர்ஸ் நவஜோதி ஹோம்" அனாதைச் சிறுவர்கள் இல்லத்தில் புறநகர் மாநில திமு கழகப் பொறுப்பாளர் அலிசேக் மீரான் தலைமையில் மாலை சரியாக 7 மணியளவில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பிகிருஷ்ணன் , வதிலை பிரதாபன் ஜேம்ஸ் தேவதாசன், அ.இளங்கோ, வே. சதானந்தன், வெ.அ.ஜெய்னுல்லாபுதீன், வீரை சோபாபு, சிவக்குமார் சுந்தர்ராஜ், மெஹபூப் பாஷா, எஸ்.பி.குமரேசன் , சிலுவை தாசன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

மும்பை மாநில திமுக இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமார், கல்யாண் கிளைக்கழக அவைத்தலைவர் க.ஜீவானந்தம், பீவாண்டிக் கிளைக் கழகச் செயலாளர் மெஹபூப் பாஷா, ஜோஹேஸ்வரி கிளைக்கழகம் தமிழினநேசன், தானே கிளைச் செயலாளர் பாலமுருகன், முலுண்டு கிளைச் செயலாளர் பெருமாள், வாஷி கிளைக்கழகச் செயலாளர் பழனி, வாஷி கிளைக் கழகத் தோழர்கள் தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, குலசேகரன் ஜி.பசுபதிநாதன், சயான் கிளைக் கழகச் செயலாளர் சி.சுடலையாண்டி, சீத்தா கேம்ப் கிளைக்கழகம் சார்பில் ஆழ்வார், ராஜேந்திரன், அம்பர்நாத் கிளைக் கழகச் செயலாளர் ஜஸ்டின், திவா கிளைக்கழகச் செயலாளர் வேல்முருகன், ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் கு.தர்மலிங்கம், பாண்டு, சுரேஷ், மற்றும் பல கழக உணர்வாளர்கள் நிகழ்வில் முன்னிலை வகித்துச் சிறப்பிக்கவுள்ளார்கள்.



தேனி தெற்கு மாவட்டம்ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடமலைமயிலை ஒன்றியத்துக்கு உட்பட்ட பொன்நகர் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 10. லட்சம் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை கட்டிடத்தை ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.